உ

திருச்சிற்றம்பலம்.

சிந்துபூந்துறைத்

# தக்ஷிணாமூர்த்திக்கலித்துறையந்தாதி.

இது

சிந்துபூந்துறைத்தக்ஷிணாமூர்த்தி ஆச்சிரம

மடாதிபதியாகிய

**ஸ்ரீலஸ்ரீ. M. வேதநாயகசுவாமி அவர்கள்**

விரும்பியபடி

தச்சநல்லூர் ம-ா-ா-ஸ்ரீ, ரயிட்டர் பாலுநாயுடு

அவர்களின் கனிஷ்டபுத்திரரும்,

சிந்துபூந்துறைவாசரும், பென்சன்போலீஸ்

இன்ஸ்பெக்டரும், தற்காலந் திருச்செந்தூரில்

நியாயவாதியாயிருப்பவருமாகிய

**B. B. நாராயணசுவாமிநாயுடுவால்**

இயற்றப்பட்டு,

சென்னபட்டணம்

சைவவித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

இதன்விலை அணா - ௨.

1912

946
3.12

07,12 MNS,4 J
N12
110697

உ

# சிறப்புப்பாயிரம்.

இந்நூலாசிரியரின் பெரியதாயார்மகனும்
பென்சன்போலீஸ் எட்கான்ஸ்டேபிளுமான
**மேலப்பாவூர்க் கோபாலநாயுடு அவர்கள்**
இயற்றியது.

## விருத்தம்.

பொருநைக் கரையில் விளங்குசிந்து பூந்துறை தன்னிற் புனிதனென
இருக்கும் வேத நாயகனுர் துறவி யியற்றுங் கோவிலிற்சீர்
பெருக்குந் தட்ச ணாமூர்த்தி பெம்மான் றனக்கோ ரந்தாதி
விருப்ப மாக வுரைத்தனனா ராயண சாமி மெய்த்தவனே.

---

திருப்புகழ்ச்சுவாமிகளென்றும், முருகதாச
சுவாமிகளென்றும் வழங்கும் வண்ணச்சரபம்
திருநெல்வேலி ஸ்ரீஸ்ரீ. தண்டபாணிசுவாமிகளின்
மாணாக்கரும் முத்தமிழ்வித்துவானுமாகிய சந்தப்புலி
**பாவூர் - மு. பார்த்தசாரதிநாயுடு**
இயற்றியது.

## வெண்பா.

பொன்னம் பொழிற்சிந்து பூந்துறையில் வாழ்மோனச்
சின்னம் பொறுத்தவட தேசிகற்கே—சின்னம்பொன்
றந்தாதி நாரா யணசாமி யாம்புலவன்
நந்தாதி யாத்தளித்தா னால்.

சென்னை-600 008
14872

## சிறப்புப்பாயிரம்.

### வண்ணவிருத்தம்

குழிப்பு.

*தந்தந் தாந்தன தானா தானன தானத் தனதானா.*

அந்தம் பேண்பிர மாபால் வாய்தரு மாதித் தவர்நால்வோர்
அன்புந் தேர்ந்தொரு சீரே நேர்சொல வாலுக் கடியானோர்
சிந்தும் பூந்துறை வாழ்மோ னாகா தேவிற் கொருமாலா
செஞ்சந் தேய்ந்திடு கோடார் மாமுனி தேரத் தமிழாலே
பந்தங் கூர்ங்கவி நூரு லேமுதிர் பாகிற் கிணையாவாய்
பண்பின் சான்றவர் பூரா வேகொளு பான்மைக் குருமாறே
தந்தும் பூண்டன னால்சீர் மேதகு தாமப் புயமீதே
சந்தந் தேர்ந்தவ னாம்நா ராயண சாமிப் புலவோனே.

---

இந்நூலாசிரியன் நண்பரான திருநெல்வேலிஜில்லா எட்டயபுரம் சமஸ்தானம் சம்புலிங்கபுரத்திலிருக்கும்

ம-ா-ா-ஸ்ரீ.

## திரவியசங்கர நாராயணக்கவிராயரவர்கள்

இயற்றியது.

---

கந்த மார்பொழிற் கற்பகக் காவெனக் கவின்சேர்
சிந்து பூந்துறை நகருறை தெக்கணா மூர்த்தி
யெந்தை மீதிலந் தாதியம் பனுவலை யிசைத்தான்
விந்தை சேர்புய னன்னவன் செயலினை விரிப்பாம். (க)

0712
M2



## சிறப்புப்பாயிரம்.

கன்னி நாட்டினி னெல்லையம் பதியெனக் கழறு
மன்ன நன்னகர்க் குத்தர குணதிசை யழகே
மன்னு தச்சநல் லூரினிற் பாலுவென் றுயர்ந்தோர்
பன்னு நாமத்தோன் றவத்தினு லிகத்திலுற் பவித்தோன். ()

தெண்டி ரைக்கட லாடையை யுடுத்திடுஞ் செகத்திற்
றண்ட மிழ்ப்பெருஞ் சலநிதி யெனப்பலர் சாற்ற
வண்டு ழாயவன் மலரடி யனுதினம் வணங்குந்
தொண்டு மிக்குளான் றமிழொடு மாங்கிலந் துணிந்தோன். (௨)

பேச ருந்திறற் பென்சன்போ லீஸ்சின்ஸ் பெக்டர்
தேசி லங்குவக் கீலுத்தி யோகமுஞ் செய்வோன்
நேச மிக்கமன் னவர்பலர் புகழ்ந்திடு நிருபன்
பாசு ரத்துடன் பொருணலம் பகர்ந்திடும் பண்போன். (௩)

பாதி மாமதி சூடிய பானருள் பூண்டு
தீதி லாதநற் கருமங்கள் யாவையுஞ் செய்யும்
வேத நாயக சாமியி னன்பினை வேண்டுஞ்
சாது சர்க்குணன் றயையுடன் கருணைசேர் தக்கோன். (௪)

இன்ன தன்மைய னாகிய வேந்தனல் லெழிலே
மன்னு தக்கணு மூர்த்தியந் தாதியை மகிழ்வாய்
நன்ன யம்பெறப் புகன்றன னூரா யணனுப்
பன்னு நாமனிங் கிவன்செயல் பகர்ந்திடற் பாற்றே. (௫)

மனித ராய்ப்பிறந் தறிவுநூ லுணர்ந்துமா நிலத்தி
லினிது றம்புல வோர்மகிழ்ந் திசைப்பரே யன்றே
தனத னென்னவே புகலுநா ராயண சாமி
புனித னன்புட னிசைத்தவந் தாதியின் புகழே. (௭)

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

---

# அவையடக்கம்.

கலிநிலைத்துறை.

முற்ற வேயுணர் முருகனுக் காட்படு முனிவன்
சொற்ற பாவினு மேபிழை சொல்லுவ ரென்றாற்
கற்ற நாவலர் கழகத்தி னிடைகடை யேன்சொல்
வெற்ற தாமொழிக் கென்சொலா ரிவைவியப் பலவே.

சொல் - பால்பகாவஃறிணை.

திருச்சிற்றம்பலம்.

திருநெல்வேலித் தேவாரத்தில் திருஞானசம்பந்த மூர்த்திநாயனாரால் "சிந்துபூந்துறைகமழ்" என்று சிறப்பித்தோதப்பெற்ற சிந்துபூந்துறை நகர்த்

# தக்ஷிணாமூர்த்திக்கலித்துறையந்தாதி.

விநாயகர்வணக்கம்.

திருவளர் பங்கய மார்சிந்து பூந்துறை சேர்ந்தமர்ந்த
வருவுரு வாயொளிர் தக்ஷிணா மூர்த்தி யடிமலர்க்கே
மருவுமந் தாதிநற் சொற்பொரு டேர்ந்து வழுத்தவாண்
சருதுவ தன்பர்க் கருள்சித்தி யைங்கரன் றாண்மலரே.

கங்கைக்கு மேலாத் திகழும் பொருநைக் கரையிலகி
எங்கு மிசைசிந்து பூந்துறை யூரி லினியவன்பர்க்
*கங்கையி னெல்லியாந் தக்ஷிணா மூர்த்தியென் னாண்டவனே
புங்கம் பொலியுன் திருவடி யென்றும் புகலிடமே. (க)

புகலு மறைகற்கப் புங்கவ ரண்சிந்து பூந்துறையிற்
சகலரு நற்கதி சார வருள்புரி சற்குருவாஞ்
சுகமுனி நேர்வேத நாயக சாமி தொழற்கிரங்கிச் [ளே.
சுகமுடன் றோன்றுங்கல் லாலர சேயெனைத் தொண்டுகொள்

---

க. *அங்கையின் நெல்லிக்கனியாம்.

தொண்டர் பணிந்துறை யுஞ்சிந்து பூந்துறைத் தூயவனே
யண்டர் பருகு மரிய வமுதே யருமறைகள்
விண்ட முடிவின் பொருளென்னு மேலோய் மிகத்துயர்செய்
பண்டை வினையரி தக்ஷிணா மூர்த்திநற் பண்ணவனே. (௫)

பண்ணவ ருரை நிகர்சிந்து பூந்துறைப் பள்ளியுளாய்
விண்ணகல் லாற்கீழ்ச் சனகா தியர்க்கன்று மெய்ப்பொருளை
யெண்ணற் கரிய மவுன வுருக்கொண் டியம்பநின்ற
தண்ணளி யுண்டுகொல் லெற்குப தேசந் தருவதற்கே. (௬)

தருநிகர் வள்ளல்க ளார்சிந்து பூந்துறை தன்னில்வந்து
கருதரு சின்முத் திரைக்கரத் தேவ கருக்கடலா
மருவினை மாய்த்து மனநிலை கொள்ள வகையறியுந்
தெருளினை யெற்களிப் பாய்வட வாலமர் சின்மயனே. (௭)

சின்மய மார்திரு ஞானசம் பந்தர் திருமுறையிற்
சொன்மய மாஞ்சிந்து பூந்துறை யூரினிற் றோன்றியருள்
தன்மய மாகிய தக்ஷிணா மூர்த்திசொ றத்துவத்தி
*லன்மய மென்னை யணுகவொட் டாம லருளுவையே. (௮)

அருடான் பெறுஞ்சிந்து பூந்துறை யூருறை யாரணனே
பொருடா னமர்மறை யாகம மோதிய போதகனே
மருடா னடைந்தினை யேத்தாது வீணே வருந்துமுள்ளத்
திருடா னிரிய வொளிவழங் காயின்ப மெய்திடவே. (௯)

எய்து நலஞ்சிந்து பூந்துறை யூரிற் கிறையவனே
யுய்ய முனிவர்க் குபதேசஞ் சொற்றநல் லுத்தமனே
செய்தவஞ் சற்று மிலாவடி யேனுன் றிருவடியைக்
கொய்மல ரிட்டு வழுத்திட ஞானங் கொடுத்தருளே. (௧௦)

---

௮. *சந்தேகம்.

கொடுத்தல் மிகுஞ்சிந்து பூந்துறை யூர்வாழ் குணக்குன்றமே
யடுத்தவர் யாவர்க்கு மோனத் திறந்தரு மானந்தனே
கெடுத்தரு ளைம்புலன் சென்று துயர்செய் *கெதியினையே
தொடுத்தன னுன் பதமலர்க் குக்கவிச் †சொல்லணியே. (௯)

சொல்லாற் பொருளா லளவையி னாலென்றுஞ் சுட்டவொண்ணாக்
கல்லா னிழற்கண் ணமர்மோன ஞானக் கருணைவைப்பை
வல்லாளர் கண்ட வழியறிந் தந்நன் மார்க்கஞ் சென்றே
யெல்லாருந் தென்சிந்து பூந்துறை யூரினி லேத்துவமே. (௧௦)

எத்தேனென் றாலு மெனைப்புலன் செய்யு மிடும்பையறக்
காத்தாள னிற்குக் கடனென வந்துன் கழல்பணிந்தேன்
பூத்தார் புனிதரும் புங்கவர் வாழ்வையும் பூழியென்றுண்
ணீத்தாரும் வாழ்சிந்து பூந்துறை மேவு நிராமயனே. (௧௧)

*நிராசனம் வேறு மதத்தரைச் செய்ய நிகழ்த்துகின்ற
புராண முளவெம் மதத்திற்கு †மேலெதும் பொய்மையெனக்
‡கிராக மெனவைந் தடக்க வுரைக்கு¶நற் கீதைக்கெட்டா
०அராம மமர்சிந்து பூந்துறை மோனத்த னாதரவே. (௧௨)

*ஆதர வேய்சிந்து பூந்துறை †யாதவ ‡வன்பினினை
யா¶தர ணீயென வெண்ணா வெளியனுக் ०கைம்புலனை
யா**தர ††வாரண ‡‡வானந்த ¶¶வன்பருண் ணாமிர்த
யாதர வென்றுனைப் பாட வரந்தா வகமகிழ்ந்தே. (௧௩)

---

௯. * மார்க்கம். † மாலை. ௧௨. * கொலை. † மேலான. ‡ ஆமை. ¶ வேதாந்தம். ० அழகு. ௧௩. * ஆதரவுபொருந்திய. † சூரியனே. ‡ அன்பின் + கினையாது. ¶ அரண் + நீ + என. ० ஐம்புலன் + னை யாது. ** அரனே. †† வேதமுதல்வனே. ‡‡ ஆநந்தனே. ¶¶ அன்பருண்ணப்பட்ட வரிய வமுதே.

அகத்து டணுவணு வாயண்ட மெல்லா மபேதமுடன்
மகத்தா யமைந்தரு டக்கண மூர்த்தி மவுனவைப்பைச்
சகத்தோர் துதிசிந்து பூந்துறை யூரிற் றரிசித்திடி
விகத்தே தருகுவன் செல்வமு ஞானமு மேர்பெறவே. (கச)

ஏர்மிகு பொன்சிந்து பூந்துறை யூரினி லீசனெனுங்
கார்மலி *பங்கஞ் †செருக்குங்கல் லாலமர் கண்ணுதலே
நீர்‡பளம் பாய்வ தெனவுமென் னுள்ள நினதுபதப்
பேர்பெறு மின்பப் ¶பெருக்கிற் கலத்தல் பெறவருளே. (கரு)

பெருந்தகை யோர்க ளமர்சிந்து பூந்துறைப் பேரொளியே
யருந்தவர்க் காலி னமர்ந்தருள் செய்திடு மாசமிர்தே
பொருந்துஞ் சனனப் பிணிக்கு மருந்தெனப் போற்றியுன்றன்
றிருந்திய சேவடிக் கன்பினை யென்றென்றுஞ் செய்குவனே.()

செய்யிற் கனிரச மார்சிந்து பூந்துறைச் சிற்சுடரே
கையிற்சின் முத்திரை கொண்டமர் மோனக் கருணையனே
பொய்யைமெய் யென்னும் புணர்முலை மாதரின் போகமொழித்
தைய நின்றாளுக் கடிமைசெய் துய்ய வமைகுவனே. (கஎ)

*அமைவனஞ் சூழ்சிந்து பூந்துறை யூருறை யம்பரனே
யிமையவ ரேத்திடு தக்ஷிண மூர்த்தி யெழில்விளக்கே
†சுமையுட ரேனரம் பென்புதி ராதி தொகு‡கணத்தா
லமைவுறு கூடழி யும்மென வாய்ந்துனை யண்டினனே. (கஅ)

அண்டினர்க் காதர வாஞ்சிந்து பூந்துறை யாள்மவுன
மண்டல மூன்றினு மன்னு முருவினில் மற்றறிவாற்
கண்டவை யாதினுந் தோயு முனது கருணைபெறத்
*தொண்டதை யான்புரி வண்ண மெனைநற் சுகத்தின்வையே.

---

கரு. * பாவம், † சீக்கும், ‡ பள்ளம், ¶ வெள்ளம். கஅ, * மூங்கில்வனம். † சுமை + உடல் + தோல் + நரம்பு + என்பு + உதிரமாதி. ‡ கூட்டத்தால். ககூ, * அடிமை.

சுகமெனச் சொல்லுதல் சும்மா விருக்கத் துணிதலென்றே
யகமிகு பக்குவ மாக மறைசொ லதைமறந்து
மகமலி நற்சிந்து பூந்துறை மோன மயலுழன்று
சகமெனு மாய வனத்தலை வேனைத் தடுத்தருளே. (உ0)

தனத்தந் தனதந்த தாந்தன தாந்தன தந்ததனா.

தடுக்கும் பொருளுண்டு காந்தரு வேஞ்சா தம்பிழையா
தெடுக்குங் கலையுண்டு பாங்குட னேய்ந்திடு மென்றிடலே
*கடுக்குங் குறிகொண்டு தோன்றிய வாண்டவ கஞ்சன்விண்ணோ
ரடுக்குந் தகைசிந்து பூந்துறை நேர்ந்தவ வன்பருளே. (உக)

அன்பிற் பழுத்த வடியா ருளத்தம ரற்புதனே
யின்புற் றுனது பதமடைந் தேற்கரு ளீதலின்றித்
துன்பிற் சுழலவுஞ் செய்குவை யோபுவி துத்தியஞ்செய்
யென்பிற் புதுமை மலர்சிந்து பூந்துறை யீச்சுரனே. (உஉ)

சுரர்புக ழீரெழு சாத்திர மீன்றிடு தொல்துடியைத்
தரமுள நற்சம மாதி யறுவகைச் சம்பத்தினைக்
கரமோ ரிரண்டு கொடுதெரிக் குந்நங் கடவுளையே
புரமதிற் சீர்சிந்து பூந்துறை சேர்ந்துநாம் போற்றுதுமே. (உ௩)

போற்று முனதிரு பாதாம் புயத்தைப் புணையெனநா
னேற்றுத் திரிந்துங் கொடும்பவ சாகரத் தின்னுலகு
சாற்றுஞ் சிறுமையிற் றாழ்தனன் றேவுயர் தண்செருந்தி
நாற்ற மலிசிந்து பூந்துறை யாய்குரு நாயகமே. (உச)

நாயக னேயொரு நான்மறை யந்த நடுமுதற்கும்
தாயக னேமலர்த் தேன்சிந்து பூந்துறைத் தற்பரனே
*தூயக னேயிலர் கொன்றா னருந்துந் துடுக்கை†யறச்
சா‡யக னேர்மைவிட் டன்னவர் நற்கதி சாருதற்கே. (உ௫)

---

உக. *ஒக்கும் - சின்முத்திரையையும் மானையுந் தரித்தவிஷயம்.
உ௫. * பரிசுத்தமானமனமில்லாதவர். † அச்சாறு. ‡ அசல் + நேர்மை.

சாருங் குயிலும் பயில்சிந்து பூந்துறைச் சற்குருவே
தேருஞ் சதுர்மறை *யீந்தனை யாலின்றித் தேசமெங்கும்
யாரும் புகழு†மின் றந்தியோ டின்னன வேய்ந்தனவாற்
கோருந் தவர்க்குமுன் சாற்றினை சொல்மர்மங் கூறுகவே. (உசு)

கூறுகு தேங்கனி மாந்தி முசுக்கள் குளிர்பொழில்வாய்த்
*தாறுக டாஞ்சிந்து பூந்துறைத் தத்துவ தையனல்லார்
†மாறுக ளேனு மணுகா தெளியனை வாழ்வித்திடு
மாறுக டாட்ச மருள்வா யுலக மதித்திடவே. (உஎ)

மதித்திடு மெய்ப்பொரு ணல்வர்க் கருளிய மாதவவான்
குதித்திடு வாளை யுகள்சிந்து பூந்துறைக் கோவில்கொண்டோய்
விதித்திடு வேதன்கை வேலை யொழித்தினி மேற்பிறவி
கொதித்திடு மாறுசெய் தாண்டரு ளென்மனங் கொள்சுகமே. ()

சுகவடி வேகல ஞானம தாகத் தொழுதிறைஞ்சு
மகவடி யாருள மாலய மாக்கொளும் வானவநின்
நகவடி மந்தி குதிசிந்து பூந்துறை நண்ணுநர்க்குப்
பகவடி வேய்சடத்* தானகர்ச் சீரென்றும் பண்பிலதே. (உகூ)

பண்பில ராயினும் பாரோர் புகழும் பரிவுடைய
நண்பில ராயினும் நின்மலர்த் தாளிணை நாடிநின்றால்
விண்பில மண்ணிற் பெறற்கரு ஞானத்தை மேவுவராற்
றண்பில வங்கள் திகழ்சிந்து பூந்துறைத் தற்பரனே. (௩0)

---

உசு. * ஈந்தனையால் + இன்று + இத்தேசமெங்கும். †மின்சாரத்தந்தி. உஎ. *தாறுகள் + தாவும். †மால் + துகளேனும். உகூ, *பெண்குறிகள் பொருந்திய தேகத்தனான தேவேந்திரன்.

தற்பர சிர்சிந்து பூந்துறைத் தத்துவ தாரணியி
னற்பரம் பூசைக் களித்த பொருளை நதிவலஞ்சூழ்
சிற்பர தெய்வ மறைப்பொரு ளுல்வர் தெளியவைத்தோய்
நிற்பர மென்னை நலியா நிலையி னிறுத்துவதே. (௩க)

நிறுக்கும் புகழ்சிந்து பூந்துறை நின்மல நீணிலத்தில்
வெறுக்குஞ் செயலினைச் செய்யினு மென்னை விகற்பம்வைத்தே
யொறுக்குந் தகைமை யொழித்து மவுனத் துறுதிசொற்றுப்
பொறுக்குந் தயையை யருளென நாளும் புகலுவனே. (௩௨)

புகலு முனது பதமலர் தஞ்சம் புகுந்திடுநா
ளிகலும் புலன்செய் துயரா லுழல லினித்தரமோ
பகலுஞ் செலாப்பொழில் சூழ்சிந்து பூந்துறைப் பண்ணவநன்
ககலு மனங்களைந் தார்க்கன் றித் தோன்று வருட்கடலே. ()

கடலிற் பெருங்கல் வியரேனு நின்புகழ்க் காட்சிநினைந்
திடலிற் பிரிந்தவ ராளா குவர்கொ திருவடிக்கு
மடலின் மதுபெரு குஞ்சிந்து பூந்துறை மௌனவெண்ணிச்
சுடலிற் சுவண மெனவுள் ளுருகித் தொழுகுவனே. (௩௪)

தொழுவா ருளத்துறை சுந்தர முக்கட் சுடர்க்கொழுந்தே
மழுவார் கரனே மறைநான்குங் காணரும் வண்மையனே
யெழுவார் சடைத்தவர் சூழ்சிந்து பூந்துறை யெம்மிறையே
வழுவா ருளத்தேனை யுந்தடுத் தாட்கொண் மனதுவந்தே. (௩௫)

வந்தே சரணம் புகுமடி யார்க்கு வரமனைத்துந்
தந்தே புரக்குந் தகையுறு தற்பர தண்வயலி
னந்தே யவிர்சிந்து பூந்துறை நம்ப நவில்மவுன
சந்தே கமின்றிப் புரப்பது நின்கடன் றத்துவனே. (௩௬)

தத்து சலத்தடஞ் சூழ்சிந்து பூந்துறை சார்ந்துமெய்ம்மை
யத்து விதனை யனந்த மறையு மறைந்தவனைப்
பத்து மனத்தவ ரேத்தித் திரியும் பழம்பொருளைச்
சத்து மருவுநற் றொண்டர் வருமின் றரிசிக்கவே. (௩௭)

தரிசன மின்றிச் சிறிதுந் தரித்திடேன் றாழ்ச்சியுளேன்
*றரிசனண் ணித்துய ராற்றுத வெற்குத் துணையதுசெய்
பரிசனம் நீயன்றி யார்கொலோ விங்ஙன் பகர்ந்திடற்கே
யரிசன மார்சிந்து பூந்துறை மோனவெம் மற்புதனே. (௩௮)

அற்புத மார்சிந்து பூந்துறைப் போதனை யண்டர்தொழும்
பொற்பமை தக்கண மூர்த்தியி னாச்ரமம் புக்குநித்த
மெற்புரு கித்தொழு தேத்தி லெவரு மியைதலரு
நற்பத மாம்பிர மப்பத மெய்துவர் ஞானமுற்றே. (௩௯)

ஞானப் பொருளினை யானறிந் துய்யநீ நன்குணர்த்தி
வானத் துறையு மரிமுதற் றேவரு மற்றறியாத்
தானத் துறையு மெவருக்கு மேற்பதந் தந்தளிப்பாய்
நானப் பொருள்கம ழுஞ்சிந்து பூந்துறை நாயகனே. (௪0)

நாயக மென்னப் புவிக்குள் விளங்கி நலஞ்செறிந்து
வேயகங் கொள்சிந்து பூந்துறை நண்ணிய மேலவனே
தூயக மாக வருமன்பர் துன்பந் துடைத்தருளி
நேயக மாகக் கருதிப் புரப்பது நின்பரமே. (௪௧)

பரமென் றுனது பதமடைந் தேனைநற் பத்திசெயுந் [வாய்
தரமொன் றுடையா னெனவெண்ணிப் போதத்தைத் தந்திடு
வரமொன்று சீர்சிந்து பூந்துறைத் தென்முக வண்மைபெறு
புரமென்ற மூன்று மலம்பொடி செய்த புனிதவைப்பே. ( )

௩௮. * துரிசு + அல் + நண்ணி.

புனித ரறிகம்பை மாநதி பாய்சிந்து பூந்துறையாய்
மனிதருந் தேவரு மற்றுமுள் ளாரும் வணங்கிநித்தந்
தொனிதரு தோத்திரஞ் செய்யு மவுன சுழறும்பாந்
துனிதருஞ் சன்ம மினியொழித் தற்கென்முன் றேன்றுவையே.

தோன்றிய பாலில் மறைநவ நீதச் சுபாவமுளா
யான்றவர் வாழ்சிந்து பூந்துறை மோன வகமகிழ்ந்தே
யென்றநின் பத்திகன் மத்தா வறிவ திழுகயிரு
வூன்றி யுருகிக் கடையமுன் னேவா லுன்னியல்பே. (சச)

இயல்பா யமைமன தானின் பதமல ரேத்துதற்கு
முயலா திருப்பவர் சேர்கதி யென்கொன் முதுதடத்திற்
கயல்பாய்ந் தொளிர்சிந்து பூந்துறைத் தென்முகக் கற்பகமே
செயலா லறிதரு மன்றமர் கும்பியிற் சேர்ப்பதுவே. (சரு)

சேருங் கதியினிற் சேர்வீ ரிலிங்கந் திகழ்ந்தெங்கணும்
யாரும் புகழ்சிந்து பூந்துறை யூருறைந் தெங்குநின்ற
பாரும் பயமும் பவனனுங் காயமும் பாவகனு
மோரு மொருவுரு வாமோனத் தேப்பத முன்னிடவே. (சசு)

உன்னே னுனதடி யார்குழு முன்னே யுறுதவத்தா
லின்னே யுனையடைந் தேத்திய பின்ன ரிழிவெங்ஙனே
தன்னேர் முயலக வாணவந் தன்னைத்தன் றுளழுத்து
மன்னே மருச்சிந்து பூந்துறை வாழு மவுனவைப்பே. (சஎ)

மவுன மெனுஞ்சுத்த மூன்றிற் றெழும்பை மறத்தலின்றி
யவிருங் கரண மவுனமும் பெற்றுன் னடிபொருந்தி
யெவருந் துதிசிந்து பூந்துறைத் தென்முக வென்வினையைத்
தவிரும் படிக்குச் செயலரி தோவித் தரணியிலே. (சஅ)

தாணி முதற்பல வண்டமும் வானவர் தாமுநடிப்
பரணி யவைக்குழா மென்றே யுணர்ந்தேன் பதவிபெற
விரணி யமது நிறைசிந்து பூந்துறை யேய்மவுன
வரணி யுனது பதமல ரன்றி யறிகிலனே. (௪௯)

அறிந்தே முனிவ ரறியா மறையை யறிந்துகொளச்
செறிந்தே யுனது திருவடி யேதொழத் தேர்ந்தளித்தாய்
பிறிந்தே யளியறி யாச்சிந்து பூந்துறைப் பேரொளியே
மறிந்தே நரகிடை வீழா வகையை மகிழ்ந்தருளே. (௫0)

அருளே யிலாது பொருளே பறிக்கு மரிவையர்தஞ்
சுருளேய் சொருக்கி லுயிரே சொருகிச் சுழலலின்றித்
தெருளே யுடைய ரமர்சிந்து பூந்துறைத் தென்முகனே
வெருளே யிலாதுன் றிருவடி போற்ற விரும்புவனே. (௫௧)

விரும்பு மனத்தவர் மெய்ப்பொரு ளேமறை மேலவனே
கரும்பின் ரசமே கவிவாணர் சொற்பொருட் கண்மணியே
யரும்பு மலர்சிந்து பூந்துறை யாலம ராதியனே [லே.
யிரும்பு மனத்தையு மீர்த்தென்னை யாட்கொள்வ தென்றுகொ

என்று நினதருள் கிட்டிடு மேழைய னென்செய்குவே
னன்று வருகினுந் தீது விளையினு நானிலத்தி
லொன்று மறிய வெனக்கோ வுணர்விலை யுற்றெனையா
டென்று புகழ்சிந்து பூந்துறைத் தென்முகத் தூயவனே. (௫௩)

தூயே னலேனுன் றிருவடி நன்றாய்த் தொழுதறியா
நாயே னையுமிங் கொருபொரு ளாக நயந்துவந்து
தாயே மகவினைக் காப்பது போற்றயை தந்தருள்வாய்
வேயே யமைசிந்து பூந்துறை யேய்ந்திடு மேலவனே. (௫௪)

மேலே யொருதெய்வ மின்னினு மில்லென மேவியுமுன்
பாலே யடைந்து பணிபுரிந் தென்றமெய்ப் பத்திசெய்வே
னாலே யமர்சிந்து பூந்துறை யாண்டவ வந்தியத்தில்
வேலே யுடையமன் வாதனை யின்றி விலக்குகவே. (௫௫)

விலக்கு பவரா ருனையன்றி யூன்றினும் வெவ்வினையே
யிலக்குக் கொளுமனந் தன்னையு மிங்ங னியன்றமட்டிற்
கலக்கித் திருப்பிக் கதிபெறு மாறு கருணைசெய்வாய்
துலக்கு புகழ்சிந்து பூந்துறை யாலமர் சோதியனே. (௫௬)

சோதி மலைச்சுக வாருதி யேகற் சுடர்க்கொழுந்தே
யோதி யுணர்ந்தவ ருள்ளிரு ணீக்கிடு மொள்ளொளியே
யாதி முனிவர்க் கருள்சிந்து பூந்துறை யாலமர்வோய்
நீதி யுடனுன் பதமல ரேத்திடு *நேயருளே. (௫௭)

நேய முடனின் றிருவருள் கூடி னிதந்துயர்செய்
மாய வினையா ணவமா மலங்களு மாய்ந்திமோ
லேய விதசா தம்மிதி லைய மிலையென்றுமே
தோய நிறைசிந்து பூந்துறைத் தென்முகத் தொல்பரனே. (௫௮)

பரவெளி யேயுப சாந்த வெளிமுதற் பாழ்வெளியே
யுரவு மிவைகொளு மேழ்வெளிக் குள்வெளி யோங்கிநின்று
விரவ் வெளிகளைத் தன்னு ளடக்கும் வெளிவெளியே
பரவு மலிசிந்து பூந்துறை யாற்கீழ்ப் பரவெளியே. (௫௯)

பாவு மவுனன் பதஞ்சிந்து பூந்துறைப் பள்ளியினில்
விரவும் புதுமல ரிட்டு வணங்கிட மேவவலார்
காவில் மனத்தர் முனிவ ரிருடிகள் கந்தருவ
ராவி லடிதுயின் மூர்த்தியு மாதி யமரருமே. (௬௦)

௫௭. * அன்பு.

அமரர் விழைசிந்து பூந்துறை மோன னவிர்முகமுந்
தமரக மும்மரை யுஞ்ஞான முத்திரைத் தற்குறிப்பு
மமருங் கரங்களும் வீரா சனமு *மபாவத்துட
னமர்புரி பாதமு மெஞ்ஞான்று நெஞ்சி லகங்கொண்டதே. ()

அகமே யருணற் றடிசிந்து பூந்துறை யண்மவுனன்
சுகமே யகங்கா ரமதெனுங் கங்கை தொடுசெடையும்
*பகமேய் †வலபக் குழைகளும் நின்மலப் ‡பற்பமுமே
நிகமே யறிவாம் ¶பணியுமென் னுள்ளத்தி னிற்கின்றவே. ()

நிற்குண மான நிலையுடை யாய்நினை யேநினையாத்
துற்குணந் தன்னையும் வேரற மாய்த்துத் துதிபெருகு
நற்குண சாகர மாடத் தகுந்த நயஞ்செய்குவாய்
சற்குணர் வாழ்சிந்து பூந்துறைத் தத்துவ சம்பன்னனே. (சுங)

சம்பிர மத்துட னேர்சிந்து பூந்துறைத் தற்பரனே
யம்பர வாறு சமயங்கட் கெட்டா தமர்பவனே
யிம்பரத் தில்லாத் துயரினி லாழ்ந்து மெழுச்சியின்றிப்
பம்பரம் போலச் சுழல விடாதருள் பாலிப்பையே. (சுச)

பாலிக்குச் சொல்லார் களங்கள மென்னப் பழித்துயர்ந்து
வேலிக்கு நின்ற கமுகிற் கயறுள்ளி மென்வயலின்
சாலிக்குட் பாய்சிந்து பூந்துறை மேவுஞ் சகுணனவிர்
மோலிக்குள் வாழ்*பணி யீர்பணி யீர்நும் முதுவழியே. (சுரு)

முதுமறை யென்றிடு வேதாந்த நூல்களை முன்மொழிந்த
சதுர்முக னேருஞ் சிவப்பிர காசத் தவன்பணிந்து
துதிகுரு தன்னைத் தருசிந்து பூந்துறைத் தொல்பரனே
கதிபெற வேண்டினன் நின்மலர்ப் பாதங் கனிந்தருளே. (சுசு)

---

சுக, * மாலையுடன். சுஉ. * பெருமை. † சத்தி. ‡ விபூதி.
¶ பாம்பு. சுரு. * பாம்புகள்.

கனிவுட னேதென் களந்தையி னந்தணன் காசியிற்போ
யினியதன் ருதையி னென்பை யிடாம லிவண்கொணரப்
பனியம் புயமா யவிர்சிந்து பூந்துறைப் பண்ணவனே
தனியளி யெற்கருள் வாயுனைப் போற்றத் தகைமைகொடே. ()

தகையார் களிறொத் தலைந்து புவியினிற் றக்கதனத்
தொகையே யுளார்தங் கடைத்தலை வாயிற் சுழலலன்றித்
திகையா தெவரும் பரப்பிர்ம மென்று தெரிந்துநித
முகையே மதுச்சிந்து பூந்துறைத் தேப்பத முன்னிலரே. (சுஅ)

முன்னே தவங்கண் முயன்றறி யேன்பல மூதடிகள்
பின்னே திரிந்து பணிபுரிந் தென்றும் பிறப்பறுக்கத்
தன்னேர் தகைசிந்து பூந்துறைத் தற்பர தன்மையுட
னின்னே யதாற்றி யிதமுறச் செய்தரு ளென்னுழியே. (சுகூ)

என்னிரு கண்மணி யேயத னுள்ளுறை யெல்லொளியே
யுன்னருந் தீங்கனி யேயத னுள்ளம ரொண்சுவையே
துன்னருஞ் சோலை யமர்சிந்து பூந்துறைத் தொல்லறிவே
யுன்னல மிக்க வருளெனக் கின்னே யுதவுவையே. (எ0)

உதவி யுனையன்றி யார்சிந்து பூந்துறை யுத்தமநின்
பதவிய லுன்னிப் பணிந்திட வென்மனம் பற்றவைத்தே
யிதவித மாகப் பயன்சொலக் கற்பித் திகந்தனிலே
மதவிவ கார மொழித்ததி தத்தினை மன்னச்செய்யே. (எக)

மன்னுவ தென்றன் மனத்திடத் தேயுன் வனப்பதமே
பன்னுவ துன்றன் பழமறை மெய்ப்பொருட் பான்மையையே
யுன்னுவ துன்றன் றிருவடி யாருக் குதவுதலே
சென்னுழை சோலை யமர்சிந்து பூந்துறைத் தென்முகனே. ()

தென்பான் முகனை யெழிற்சிந்து பூந்துறைத் தெள்ளமுதை
யன்பா லடைந்தே யவனருள் கூட்டு மலர்ப்பதத்தை
யென்பா னதுவு முருகிட வேத்தி வியல்வினைசெய்
யொன்பான் கிரகமு மற்றைக் கணங்களு மோடிடுமே. (எங)

ஓடு புவியப் பரிதியைச் சுற்றலு முன்னதத்திற்
பீடு பெறவவ் வொளிநிலை நிற்றலும் பெட்பமுடன்
கூடுவ தன்றிமற் றண்டங்க டோன்றலுங் கூறப்புகின்
தேடு புகழ்ச்சிந்து பூந்துறைத் தேவநின் சீர்ச்செயலே. (எச)

சீரார் மறைக டெரிந்தே துதிக்குஞ் செழும்பொருளே
பேரார் சமயப் பிதற்ற லறியாப் பெருமையனே
காரார் பவத்தைக் கடக்கப் புணையதுன் கான்மலரே
தாரார்ந் தலர்சிந்து பூந்துறைத் தற்பர சத்தியமே. (எரு)

சத்திய மாகக் கனகமு மோடுஞ் சமமெனவெண்
ணித்திய ஞானிகள் வாழ்சிந்து பூந்துறை நேர்மவுன
மத்திய லென்னச் சுழல்மதி விட்டுன் மலர்ப்பதத்தைத்
துத்தியஞ் செய்யிற் பெறும்பல னுக்கிணை சொல்லரிதே. (எசு)

சொல்லாமை மன்னிடு மெய்ப்பொருள் நால்வர்க்குச் சொற்றவ
பொல்லாமை யற்றவர் வாழ்சிந்து பூந்துறைப் புத்தமுதே [னே
நில்லாமை யெல்லா மெனவே நினைந்துன் னிமலபதங்
கல்லாமை யில்லேன் கடுகிப் பணிந்தேன் கருணைவையே. (எஎ)

கருணைக் கடலா யதிலா ரமுதாய்க் கருதுவருள்
*ளிருணைத் திடவல நீளொளி யாக விருப்பவனே
யருணற் றடுபொழி லார்சிந்து பூந்துறை யற்புதனே
தருணத் தினிவிது வேயென்னைக் காத்திடத் தக்கதுவே. (எஅ)

---

எஅ. * இருள் + நைத்திட.

தர்க்கம் பிதற்றிச் சமயம் பழித்துத் தரணியினிற்
பொக்கம் பொலிந்து புலம்பித் திரிகின்ற புத்தியுள்ளீர்
மிக்கவர் வாழ்சிந்து பூந்துறை மேவி விரும்பியெங்கள்
தக்கண மூர்த்தியை யேத்தி லடைகுவிர் சற்புத்தியே. (எக)

சற்சபை சார்ந்து தனிநல மார்க்கமுந் தண்ணளியு
நற்சபைக் கேற்ற நடையு மடைந்து நலம்பெறுவீர்
எற்புடை சூழ்சிந்து பூந்துறைத் தேவி னிருமலர்த்தாள்
பொற்புடன் கூடியு மாடியும் பாடியும் போற்றிடினே. (அ0)

போற்றாரும் போற்றித் திகழ்சிந்து பூந்துறைப் பூரணனே
யேற்றே னெனினு மிருவினைக் காள்செய்சிற் றின்பமெனுஞ்
சேற்றே யழுந்தித் தியங்குகின் றேனையுந் தேற்றிவற்றா
ஆற்றே நிகரு நினதளி கொண்டரு ளுத்தமனே. (அக)

உத்தமர் வாழ்சிந்து பூந்துறைத் தென்முக வுண்மையதாய்ப்
புத்தர் நசிக்க வயிணவச் சைவப் புனிதர்சிலர்
சித்த மதுகொடு பாடியு மன்னோர் திரள்பெருகி
இத்தரை யோங்கவும் வைத்தது மென்கொ லிறையவனே.* ()

இறையள வேனுமுன் றாண்மற வேனுக் கிரங்குகிலாய்
முறையது வோசிந்து பூந்துறைத் தக்கண மூர்த்தியைய
குறையது நானடை யாவண மிந்தக் குவலயத்தி
னிறையரு டந்து புரந்தெனை யாளுதல் நின்கடனே. (அங)

நின்னாம மொன்றை நவின்றோர்க்கு முத்தி நிலைக்குமென்றா
லென்னா வதனாற் புகழத் தரமோ யிருவினைதீர்
*நன்னா கரீகர் வதிசிந்து பூந்துறை நாயகனே
முன்னால நீழ லிருந்தொன்றைக் காட்டிய முக்கண்ணனே. ()

அஉ. * இவ்வுலகில் தமிழர் கஐ கோடி ஜனங்கள். புத்தர் எரு கோடி ஜனங்களிருக்கிறார்கள். அச. * நல்லநாகரீகர்,

முக்கட் சுடரே முதுமறைக் கெட்டா முடிப்பொருளே
*இக்கட் டினிலயர் வேனுன்னி நின்பெய ரேத்திநின்றே
†னக்கட் டமற நொடிக்குட் புரிகுதி யன்பமைந்த
மக்கட் டொகுதி செறிசிந்து பூந்துறை மாணிக்கமே. (அரு)

*மாணிக் குதிர்தர ளங்களை மள்ளர் வரப்பினிடை
வீணிற் குவிக்கும் புகழ்சிந்து பூந்துறை வித்தகனே
†காணிக் கடத்தைக் கருதித்த நாளைக் கழிப்பர்வய
‡தேணிக் கடையினி லுன்னையல் லான்முத்திக் கென்செய்வரே

*என்னத் திரதப் பரியுகைக் குந்தொழி லேசிகரிச்
சின்னக் கொடிசெய் திடுசிந்து பூந்துறைச் செம்மலின்றா
ளுன்னச் சிறிது மதியேய்ந் திலாரிவ் வுலகினிடை
பின்னப் படுபுன் மரமாதி யாகப் பிறப்பர்களே. (அஎ)

பிறவாத முத்தி யளிக்கும் பொருளைப் பெருநிதியை
யுறவாகக் கொள்சிந்து பூந்துறைக் கோயி லுவந்தமர்ந்தோய்
மறவா தனையா லுலண்டென வாட வருந்துதுய
ரறவா தமியே னுனதிரு தாளுக் கடைக்கலமே. (அஅ)

அடைக்குரு கந்தடத் திற்றர ளத்தை யயிர்ப்பின்றித்தன்
னுடைக்கரு வென்ன வதிசிந்து பூந்துறை யுத்தமனே
படைக்குந் தொழிலோன் மகாரொரு நால்வர் பரிவுகண்டவ்
விடைக்குரு வாகத் திகழ்ந்தாய் சற்றெற்கு மிரங்குகவே. (அக

அரு. * இக்கட்டு - துன்பம். † அக்கஷ்டமற. அசு. *மாண் + இக்கு. † காண் + இக் + கடத்தை. ‡ வயது + எணி - எண்ணி என்பது எணியென எதுகைநோக்கிநின்றது எனினுமமையும். அஎ. எல் + நத்து + இரதம் - சூரியன்விரும்பாநின்ற தேர்தூண்டுந் தொழில்.

இரங்கா தவரி லெளியருங் கற்பகத் திற்குயர்வாந்
தரங்கா னெனத்திக ழுஞ்சிந்து பூந்துறைத் தத்துவனே
வரங்கா தவித்தோ ரிதயவம் போருக மத்தியுற்றாய்
பரங்கா ணுனக்கே பழவடி யார்க்கருள் பண்ணுதலே. (க0)

பண்ணைமைத் தோளார் நடைகற்க வன்னப் பறவைகளும்
நண்ண லுறுஞ்சிந்து பூந்துறை நற்றவ நாயகனே [ளார்
புண்ணகங் கொண்டயர் வாருன்னைப் போற்றிடப் புந்திகொள்
மண்ணகத் தித்திறத் தாரென்கொ லோவந்து வாய்த்ததுவே.( )

வாய்க்குங் கனிச்சுவை முத்தமிழ் வாணர் மதவிகற்பைத்
தேய்க்கும் புகழ்ச்சிந்து பூந்துறைத் தென்முகத் தேசிகனே
தாய்க்கும் பெருகிய வன்புடை யாயித் தமியனுளப்
பேய்க்கும் பணியத் *தருமருத் தொன்றினைப் பேசுகவே. ( )

பேசுந் துணர்மது வுண்டூசு முட்கனி பிய்த்தெங்கணும்
வீசும் பொழிற்சிந்து பூந்துறை மேய விமலவைப்பே
*தேசுங் குருவெனக் கொண்டநு மானுந் தெளிந்துமன
மாசுங் களைந்திடச் செய்துநின் றாய்நின் மகிமையென்னே. ( )

மகியேய் தலங்கள் பலவற் றினுமிக்க மாட்சிமையாஞ்
சுகியேய் தருசிந்து பூந்துறைக் கோயிற் றுரியவைப்பே
சிகியே யகவும் பொழிலார் *பெருந்துறை சேர்தவனுக்
ககியே புனையுருக் கொண்டொன்றறைச் சொற்ற ததிசயமே. ( )

அதிரத ரோடொரு மூவரு மேவி யருவிஞ்சையை
முதிரவுந் தேர்சிந்து பூந்துறைத் தக்கண மூர்த்தியைய
வெதிரது நாளும் *புயவுமை யாமுன் †வியனிருவ
ரெதிரதி நட்பப் பொருளுரைத் தாண்ட தெளிதல்லவே. ( )

---

கஉ. *மருந்து. கங. *ஆகுபெயராய்ச் சூரியனைக்குறித்தது.
கச, *மாணிக்கவாசகர். கரு. *உமையாளாக, †சங்கராசா
ரியருங் கொங்கணரும்,

14692



...ரினர்க் கென்னு மிருடியர்வா
...தடங்வைகள் சூழ்சித்த பூந்துறை யாரணனே
தனியார் *துளவத்த னாகமுன் னாவ்வர்க்குத் தோன்றிநின்று
வெளியா வொருநிலை சுட்டினை மிக்க வியப்பிதுவே. (௧௬)

வியக்கும் புதுமை நிகழுட்ட சித்தியை வேட்டவர்க்குப்
பயக்குந் திருச்சித்த பூந்துறை மேய பரஞ்சுடரே
*சயக்குஞ் சாமுக னாய்மெனவை சாற்றிய தன்மையெலா
நயக்கும் படிசெய்த நின்னளிக் கேமெதிர் காட்டுவதே. (௧௭)

காட்டுக் கிசைதமிழ் ராட்டுக் கனியென காவலாசொல
பாட்டுக் கிசைசித்த பூந்துறை வாழும் பழம்பொருளே
கோட்டுக் கிசைமுரு கோனென வந்து குழுழுனியா
வேட்டுக் கிசையாப் பிரணவஞ் சாற்றினை யென்சொல்வதே. ( )

என்னே மடமையி னாற்பலர் வீணா யிகத்தினிடை
மின்னே பொருசுகத் திற்கே புழைத்து மெலிவதுவே
யன்னே யெழிற்சித்த பூந்துறை வந்தாய் யறுசமய
மன்னே யவைகட் கதீதத்து மும் வாழ்வு மருவிலையே. (௧௯)

தனனத் தனதந்த தாந்தன தய்யன தந்ததனா.

*மருதத் தொளிர்சித்த பூந்துறை யெய்திமுன் வந்தவர்பால்
†வருத்தத் ததுகுன்றி வீய்ந்திட நல்வருண் மன்றெருளாற்
றருத்தத் துவாமபி னேன்கதி விளைளிரு சம்பதமே
கருத்தப் பணிவொன்ற வேண்டிட வுள்ள‡வுள் கன்னையுமே. ( )

தக்ஷிணாமூர்த்திக்கலித்துறையந்தாதி

முற்றிற்று.

---

௧௯. முதல் ௧௯ முடிய அறுசமயத்துக்கு மிவனேகடவுளெனக்கூறியது. ௧௬. * அயக்கிரீவர். ௧௭. * விநாயகர். † ஔவை. ௨௦. * மருதமலைத்து. † வருகின்றதத்து அதாவது ஆபத்து. ‡ உன் + கம் + கை— உள்ளம், தலை, கை.